## தகுதியற்றசெயற்பாடுகள்:

கல்விக்கும் பயிற்சிக்குமானஅமைச்சின் கொள்கையின் அடிப்படையில் (The Ministry of Education and Training - Policy/ProgramMemorandum No.124A – April 27, 1999)கீழேதரப்பட்டுள்ளசெயற்பாடுகளின் உதாரணங்கள் யாவும் மாணவர்களின் சமூகப் பங்களிப்பிற்கானசேவைக்குத் தகுதியற்றவையாகக் கருதப்படுகின்றன. இவ்வாறானசெயற்பாடுகளைத் தெரிவுசெய்தல் தவிர்க்கப்படவேண்டும் என்பதுமாணவர்களுக்கு வலியுறுத்தப்படுகின்றது.:

- சேவையானதுமாணவர்கள் மேற்படிப்பிற்காகபதிவுசெய்துள்ளபாடவிதானங்களுடன் தொடர்பற்றவையாகஅமைந்திருத்தல் அவசியமாகும். உ-ம்: எதிர்காலவேலைவாய்ப்பிற்குவழிகாட்டும்செயற்பாடுகள்,தொழில் அனுபவங்கள் போன்றவைஅடங்கும்.
- வழமையானபாடசாலைவேளைகளில் சமூகசேவைமணித்தியாளங்கள் பெறப்படக் கூடாது. எனினும்,மதியபோசனவேளைகளில் அல்லதுஓய்வுநேரங்களில் தொண்டுகள் செய்யப்படலாம்.
- 16 வயதிற்குற்பட்டமாணவர்கள் சுரங்கம் மற்றும் அகழ்வுச் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது.
- 15 வயதிற்குற்பட்டமாணவர்கள் தொழிற்சாலைகளில் நடைபெறும் வேலைத்திட்டங்களில் ஈடுபடக் கூடாது.
- 16 வயதிற்குற்பட்டமாணவராகவும்,வயதுவந்தவரின் துணையுடன் வராதவராக இருப்பின்,தொழிற்சாலைகள் அல்லாதநிறுவனங்களில் பணிபுரியமுடியாது.
- குறிப்பிட்டநிறுவனத்தில் ஒருவரால் சம்பளஅடிப்படையில் செய்யப்பட்டவேலையைதொண்டடிப்படையில் செய்தல் கூடாது.
- வாகனங்களைக் கையாளுதல், இயந்திரப்பாவனை,ஏணிகள் கட்டுமானங்கள் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டிருத்தல் கூடாது.
- வைத்தியரீதியானசெயற்பாடுகளும்,சிகிச்சைவழங்கும் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டிருத்தல் கூடாது.
- சுகாதாரசட்டவாக்கத்திற்கமைய(Occupational Health and Safety Act)பிரத்தியேகபதார்த்தங்களாகக் கருதப்படுபவற்றைக் கையாளுதல் கூடாது.
- மாகாணஅரசாங்கத்தினால் வர்த்தகநடவடிக்கைகளாகபிரகடனப்படுத்தப்பட்டு,அதற்கானஅறிவும் அனுபவமும் அவசியம் எனக் கருதப்படும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருத்தல் கூடாது.
- வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள்அடங்கியசெயற்பாடுகளும்,நகைகளுடனானபரிமாற்றங்களும்,பெறுமதியானபண்டபொருட்களைக் கையாளுதல் போன்றவைதவிர்க்கப்படவேண்டும்.
- தத்தமதுவீட்டின் நாளாந்தவேலைகள் தகுதியற்றவையாகக் கருதப்படுகின்றன. அத்துடன் தனிநபருடையபொழுதுபோக்குச் செயற்பாடுகளும் தகுதியற்றவையாகக் கருதப்படுகின்றன.
- நீதிமன்றம் சம்பந்தப்பட்டசெயற்பாடுகளும் தகுதியற்றவையாகக் கருதப்படுகின்றன. உ-ம்: இளவயதுக் குற்றவாளிகளுக்குஉதவுதல்,குறுகியகாலவிடுதலையில் உள்ளவர்களுக்கானசமூகசேவைபோன்றவை.

**TORONTO CATHOLIC DISTRICT SCHOOL BOARD**

**Director of Education – Bruce Rodrigues**

**Associate Director of Education – Angela Gauthier**

**Superintendent of Student Success – Patrick Keyes**

**Superintendent of Curriculum and Accountability – Josie DiGiovanni**

**TRUSTEES 2011-2012**

1. Peter Jakovic
2. Ann Andrachuk, Chair
3. Sal Piccininni
4. Patrizia Bottoni
5. Maria Rizzo
6. Frank D'Amico
7. John Del Grande
8. Tobias Verga
9. Jo-Ann Davis, Vice Chair
10. Barbara Poplawski
11. Angela Kennedy
12. Nancy Crawford

Sarbina Renna
Student Trustee




# 40

# மணிநேரசமூகசேவை

## நேரம் விரைகின்றது……

மாணவர்கள் பட்டப்படிப்பைத் தொடர, 40 மணிநேரசமூகசேவையைப் பூர்த்திசெய்திருத்தல் அத்தியாவசியம் என்பதுஉங்களுக்குத் தெரியுமா?

## பெற்றோருக்கானவழிகாட்டி

TAMIL

## பொதுவானதகவல்களும் நோக்கங்களும்:

1999-2000ம் ஆண்டில் அமுலாக்கப்பட்டஒன்ராரியோகல்விச் சட்டவாக்கத்திற்கமைய, 9-12ம் வகுப்பில் கல்விபயிலும் அனைத்துசிரேஷ்டமாணவர்களும் குறைந்தபட்சம் 40 மணிநேரம் சமூகசேவையைப் பூர்த்திசெய்திருத்தல் அத்தியாவசியம் என்பதுவலியுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் ஒன்ராரியொசிரேஷ்டபாடசாலைச் சான்றிதழைப்(Ontario Secondary School Diploma (OSSD)பெறுவதற்கு இச்சமூகசேவைச் செயற்றிட்டத்தைப் பூர்த்திசெய்திருத்தல் பாடவிதானத்தின் முக்கியஅம்சமாகமுன்வைக்கப்பட்டுள்ளது.

எமதுமாணவர்கள்கத்தோலிக்கவிசுவாசத்தில் உருவாக்கப்பட்டு,அவர்களுடையவாழ்க்கையின் சவால்களிலும்,வாய்ப்புகளிலும் கத்தோலிக்கநம்பிக்கைகளைப் பிரயோகிக்கின்றனர். கல்வியின் உயர்மட்டத்தைஅடையதொடர்ச்சியாகச் செயற்படுகின்றனர்.அத்துடன் சமூகத்தின் பொறுப்புக்களைப் பாதுகாப்பதற்கானமுழுமையானநோக்கினைவெளிப்படுத்துகின்றனர்.

## வழிமுறைகள்:

- மாணவர்கள் ஜுலை2011 கோடைகாலமாதங்களில், 9ம் வகுப்புஆரம்பத்தின் முன்னரே,தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டுஇச்சமூகசேவையைஆரம்பிக்கலாம்.
- இச்சமூகசேவையானது,கற்கைநெறியுடன(Credit Course)சம்பந்தப்பட்டிருத்தல் கூடாது.
- சகலசேவைகளும்தன்னார்வத் தொண்டினைஅடிப்படையாகக் கொண்டு இலவசமாகவழங்கப்படவேண்டும்.
- “தன்னார்வத் தொண்டு”சகலசந்தர்ப்பங்களிலும் “சமூகசேவையாக”அமையமாட்டாது.
- வர்த்தகஅடிப்படையிலானநிறுவனங்களில் இலவசமாகப் பணிபுரிதல் தன்னார்வத் தொண்டாகஅமையாது.
- மாணவர்களின் பூரணப்படுத்தப்பட்டபதிவுகள் யாவும்,செயற்பாடுகளின் முடிவில் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## செயற்பாடுகளைஆரம்பித்தல்:

சிலபரிந்துரைகள்:

- உங்கள் பிள்ளையுடன் வழிகாட்டியைப் பற்றிக் கலந்துரையாடுங்கள். எவ்வகையானசேவைகள் தகுதியானவை,மற்றும் தகுதியற்றவைஎன்பதைஆராயுங்கள். அவர்கள் எவ்வாறானசேவைகளில் ஆர்வம் காட்டுகின்றனர்என்பதைகேட்டறியுங்கள்.
- ரொறன்ரோமாவட்டத்தின் வாய்ப்புக்களைஆராயும் பொருட்டுwww.40hours.ca, www.volunteertoronto.ca ஆகிய இணையத்தளங்களைநாடவும்.
- ஏனைய வளங்களைஆராயும் பொருட்டுஎமதுசபையின இணையத்தளத்தில் சமூகப் பங்களிப்பிற்கானமாணவர்வழிகாட்டியினைப் (Student Community Involvement booklet)பார்வையிடவும். (www.tcdsb.org> Students > Community Involvement > Community Involvement Information > Community Involvement Activity Form)
- மாணவர்களும் பெற்றோரும் தமக்குத் தேவையானஎண்ணிக்கையில் படிவங்களைஅச்சிட்டுக் கொள்ளமுடியும். பூரணப்படுத்தப்பட்டபடிவங்களைபாடசாலையில் சமர்ப்பிக்கும் முன்னர்பிரதியெடுத்துஆவணப்படுத்தல் அவசியமாகும்.
- “மாணவர்களின் பூரணப்படுத்தப்பட்டபதிவுகள் யாவும்,செயற்பாடுகளின் முடிவில் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்படவேண்டும்”.

# 40 மணிநேரசமூகசேவையைக் காலக்கிரமத்தில் பூரணப்படுத்தல் சிறந்ததுஎன்பதுமாணவர்களுக்குவலியுறுத்தப்படுகின்றது.

## தகுதியானசெயற்பாடுகள்:

ழேதரப்பட்டுள்ளசெயற்பாடுகளின் உதாரணங்கள் யாவும் தகுதியானசமூகச் சேவைப் பங்களிப்புச் செயற்பாடுகளாக் கருதப்படுகின்றன. இச்செயற்பாடுகள் யாவும் வழிமுறைகளையும் ஒழுக்காறுகளையும் அடிப்படையாகக் கொண்டதெரிவுகளைஅடிப்படையாகக் கொண்டது.

- **நிதியுதவிசேகரித்தல்(Fundraising):**குறிப்பிட்ட ஸ்தாபனத்திற்கானநிதியுதவிசேகரிப்பில் பங்கேற்றல்.அவர்களுடையசமூகரீதியானபங்களிப்புகளில் பங்கேற்றல். உ-ம்: நடைபவனிகள்,விளையாட்டுநிகழ்வுகள்,களியாட்டங்கள்,அங்காடிகள்.
- **விளையாட்டும்,பொழுதுபோக்கும(Sports/recreation):**இதில்விளையாட்டுப் பயிற்சிகளும்,விளையாட்டுப் போட்டிகளைஒழுங்குசெய்தலும் அடங்கும். உ-ம்: மெய்வல்லுனர்போட்டிகள்,கோடைகாலவிளையாட்டுநிகழ்வுகளில் உதவுதல்,நீச்சல் குளஉதவியாளராகவும்,பொழுதுபோக்கிற்கானநண்பர்களாகவும் செயற்படுதல்.
- **சமூகநிகழ்வுகள்(Community Events):**குளிர்காலகளியாட்டங்களையும்,கோடைகாலஅங்காடிகளையும் அலங்காரஅணிவகுப்புகளையும் ஒழுங்குசெய்வதில் பங்கேற்றல்.
- **சமூகச் செயற்றிட்டங்கள(Community Projects):**குறிப்பிட்டசமூகத்திற்கானஆதரவுத்திட்டங்கள்,சமூகக் குழுக்களைஅமைத்தல்,உணவுப் பொருள் சேகரிப்புபோன்றவற்றைஒழுங்குசெய்தல் என்பவைஅடங்கும்.
- **சுற்றாடற் செயற்றிட்டங்கள்(Environmental Projects):**சுற்றாடற் சுத்திகரிப்புச் செயற்றிட்டங்கள்,மரநடுகை,மீள் உபயோகம்,சுற்றாடலைஅழகாக்கும்செயற்றிட்டங்கள் போன்றவைஅடங்கும்.
- **வயோதிபருக்குதன்னார்வத் தொண்டுசெய்தல (Volunteer Work with Seniors):**வயோதிபரின் வீடுகளில் உதவிசெய்தல், உ-ம்: உணவுபரிமாறுதல்,நாளாந்தவேலைகளில் உதவுதல்,பொருட்களைச்சுமக்கஉதவுதல்,புத்தகங்களைவாசித்தல் போன்றவைஅடங்கும்.
- **கழகவேலைகள(Committee Work):**ஆலோசனைக் குழுக்கள்,அயலவர்குழுக்கள்,பிராந்தியக் குழுக்கள் போன்றவற்றில் பங்கேற்றல்.
- **சமயரீதியானசெயற்பாடுகள(Religious Activities):**போதனைவகுப்புகளிலும்,வேதாகமநிகழ்ச்சித் திட்டங்களிலும் மற்றும் சமயம் சார்ந்தசிறப்புநிகழ்ச்சிகளிலும் தன்னார்வத் தொண்டர்களாகசெயற்படல்.
- **இளைஞர்களுக்கானநிகழ்ச்சித் திட்டங்கள(Youth Programs):**ஆண்,பெண் சாரணர் இயக்கங்கள்,பொழுதுபோக்குக் கழகங்களின் செயற்றிட்டங்கள்,மார்ச் மாதவிடுமுறைநிகழ்வுகள், இளையதலைவர்களைப் பயிற்றுவித்தல்,கோடைகாலவிளையாட்டுநிகழ்வுகள்,பாசறைகள் போன்றவற்றில் தன்னார்வத் தொண்டர்களாகசெயற்படல்.
- **காரியாளய,எழுதுவிளைஞர்வேலை(Office/Clerical Work):**குறிப்பிட்டகுழுவிற்குஅல்லதுசமூகத்திற்குஅல்லது,கருணைஅடிப்படையிலான ஸ்தாபனத்திற்குவரவேற்பாளராகவும்,கணனிச் செயற்பாட்டாளராகவும்,அஞ்சல் உதவியாளராகவும் தன்னார்வத் தொண்டர்களாகசெயற்படல்.
- **மிருகங்களுடன் வேலைசெய்தல(Work with Animals):**தமதுபகுதிகளிலுள்ளமிருகக் காட்சிசாலைகளில் அல்லதுவிலங்குகளின் காப்பகங்களில் தன்னார்வத் தொண்டர்களாகசெயற்படல்.
- **ஓவியம்,கலை,கலாசாரம(Arts and Culture):**கலாபவனங்களில்,நூலகசெயற்றிட்டங்களில்,மேடைநிகழ்ச்சிகளில் தன்னார்வத் தொண்டர்களாகசெயற்படல்.
- **தனிப்பட்டோரின்செயற்பாடுகள(Activities for Individuals):**பிறரின் உதவிஅவசியமானதனிநபர்களுக்குபொருட்களைக் கொள்வனவுசெய்யஉதவுதல்,கல்விகற்பித்தல், இயந்திரப் பாவனையின்றிப் பனியகற்றுதல்,வீட்டுசுத்திகரிப்பு,கடிதம் எழுதுதல் அல்லதுதொடர்பாடலைமேற்கொள்ளல்,வைத்தியஆலோசனைக்குஅழைத்துச் செல்லல்,புத்தகங்களைவாசித்தல்,சிரமமானகருமங்களில்உதவுதல்,போன்றவைஅடங்கும்.
- **பாடசாலைச் சமூகச் சேவை(School Community Service):**வழமையானபாடசாலைவேளைஅல்லாத ஏனைய நேரங்களில் பாடசாலைச் சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் தன்னார்வத் தொண்டர்களாகசெயற்படல்.